முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 05 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 12 திகதி வரை

(21.08.2022 ஞாயிறு முதல் 28.08.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பாரெங்கும் தருமம் தழைத்திட
   பஞ்சமா பாதகங்கள் அகன்றோட
   சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
   சற்குருவே அரங்கனே உமை வாழ்த்தி
2. வாழ்த்தியே அகத்திய மகரிஷியும்
   வழங்குவேன் இந்தியா தமிழகத்தில்
   தாழ்விலா சுபகிருது யாளி திங்கள்
   தக்கபடி பஞ்சதிகதிமேல் வியதிகதி வரை நடக்கும்
3. நடக்கும் நிகழ்வாக வருங்கால பலனை
   நாட்டிடுவேன் வார ஆசியாக
   இடரென தமிழகம் இந்தியாவில்
   ஏந்திழை சிறார்கட்கு தொடரும்
4. தொடரும் துர்மரண நிகழ்வு
   துரிதகதி அரசின் செயல்கள்வழி
   தொடரா முடிவுகள் காணவேணும்
   தொண்டென இயங்கும் கல்வி நிறுவனம்
5. நிறுவனங்கள் அனைத்தும் இனி
   நீதிவழி நடக்க சேவை வழி இயங்க
   நிறுவனங்கள் மேல் கட்டுப்பாடுகள்
   நியாயவழி அரசுகள் செயல்படுத்த
6. செயல்படுத்த எதிர்காலமான தேசத்தின்
   சிறார்கள் அனைவரும் நல்வழி
   தயவாகப் பாதுகாக்கப் படுவதுடன்
   தன்னார்வ தொண்டுமிக்கவர்களாக
7. ஆகவே மாற்றங்கள் கண்டு
   அகிலம் வியக்க வளர்ச்சிநிலை
   மிகைபட இந்தியா தமிழகம்
   முதன்மைபட கண்டு சிறக்கும்
8. சிறக்கவே ஆளுமைகள் தானும்
   சேவை நோக்கில் இயங்க நலம்
   மறுக்கா சமூகம் அழிக்கின்ற
   மது புகை குட்கா கஞ்சா வகை

9. வகையிலா போதைபொருட்களுக்கு
வல்லமைபட தடுக்கும் வண்ணம்
மிகைபட கட்டுப்பாடுகள் தர
மேலான சமூகமாக ஞான பூமி ஆக

10. ஆகவே இந்தியா தமிழகமும்
ஆற்றல் மிகுதி கண்டு இனிதே
மிகைபட வளர்ச்சி நிலை காணும்
மகான்களின் ஆளுமையாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 05ம் நாள் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 12ம் நாள் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

இவ்வுலகம் எங்கும் தர்மம் தழைத்திடவும் உலகின் பஞ்சமா பாவங்கள் மக்களை விட்டு அகன்று ஓடி மக்கள் தர்மவான்களாக ஆகிட வேண்டி சக்திமிக்க சரவண ஜோதி தனை ஏற்றி ஜோதி சொரூபனான முருகப்பெருமான் மூலம் மக்கள் முருகப்பெருமானின் அருளை பெற்றிட வழிவகை செய்திட்ட சற்குரு நாதனே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை வாழ்த்தி வணங்கியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆவணி மாதம் 05ம் நாள் 21.08.2022 ஞாயிற்று கிழமை முதல் ஆவணிமாதம் 12ம் நாள் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தின் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழகத்தில் பெண்குழந்தைகளுக்கு உண்டாகின்ற துர்மரணங்கள் எல்லாம் அரசின் செயல் பாடுகளால் விரைந்து முடிவுகள் எடுத்து இனிமேலும் இவ்வித துர்மரணங்கள் நடைபெறாவண்ணம் செயல்படவேண்டும்.

தொண்டுள்ளத்தோடு கல்வி நிறுவனங்கள் செயல்பட வேண்டும் அவை சட்ட திட்டங்களை முறையாக கடைபிடிக்கும்படி அரசு செயல்படுத்திட வேண்டும்.

அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகளால் எதிர்கால இந்தியாவின் குழந்தைகள் அனைவரும் நல்வழி நடப்பதுடன் அவர்கள் தயவுடன் பாதுகாக்கப் படுவார்கள் அவர்கள் தன்னார்வ தொண்டுள்ளம் மிக்கவர்களாக ஆகி நல்ல பல மாற்றங்களை பெற்று இவ்வுலகமே வியக்கும்படி இந்தியா தமிழகம் உலக அரங்கில் முதன்மை இடங்களை பெற்று சிறக்குமப்பா.

ஆட்சியர்கள் சேவை நோக்கத்துடன் செயல்பட்டு மக்களை காத்திட வேண்டும் சமூகத்தையே சீர்குலைத்து பல சீர்கேடுகளை உண்டாக்கும் மது, புகை, குட்கா, கஞ்சா இன்னும் பலவித போதைப் பொருள்களை தடுக்கும் விதமாக அதிகமான கட்டுப்பாடுகளை அரசு விதித்து தடுத்திட இந்த சமூகம் ஞானம்மிக்க சமூகமாக, இந்தியா தமிழகம் ஞான பூமியாக ஆகி ஆற்றல்பெருகி பெரும் வளர்ச்சியை அடைந்து நாடெங்கிலும் மகான்களின் ஆட்சி உருவாகிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–